ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தொலைபேசி : 044– 25670769
நிகரி : 25675849
இணையதளம் : www.tnrd.gov.in

**கடித (1D) எண். 517, நாள்.7.9.2009.**

அனுப்புநர்
திரு க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,
சென்னை–15.

அய்யா,

பொருள் : நமக்கு நாமே திட்டம் – 2009–10 – சிவகங்கை மாவட்டம் – குன்றக்குடியில் உள்ள தருமை கயிலை குருமணி மேல்நிலை பள்ளியில் சமையலறை (Kitchen Shed) அமைக்க சிறப்பு அனுமதி கோரியது – அனுமதி வழங்கப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 62, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2009,
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், கடித எண். 68932/2009/என்இடிஎம்–2, நாள் 27.7.2009

*****

2009–10ஆம் ஆண்டில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டம், குன்றக்குடியில் உள்ள தருமை கயிலை குருமணி மேல்நிலைப்பள்ளியில், சமையலறை (Kitchen Shed) கட்டுவது குறித்த கோரிக்கை வரப்பெற்றுள்ளதாகவும் இப்பள்ளி 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மற்றும் 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் பள்ளி என்றும் சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் தெரிவித்துள்ளதாகவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் அரசாணை (நிலை) எண். 62, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2009–ல் 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணியை எடுத்துச் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் ஆனால் பள்ளியில் சமையலறை (Kitchen Shed) அமைப்பது குறித்து ஏதும் குறிப்பாக தெரிவிக்கப்படவில்லை என்றும் எனவே தருமை கயிலை குருமணி மேல்நிலைப்பள்ளிக்கு

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சமையலறை அமைக்கும் பணியை ரூ.80,000/– (பொது மக்கள் பங்குத் தொகை ரூ.40,000/– சேர்த்து) மதிப்பீட்டில் சிறப்பு நிகழ்வாக எடுத்துச் செய்யலாமென பரிந்துரை செய்து அரசு சிறப்பு நேர்வாக ஆணை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசினைக் கோரியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. அதன்படி சிவகங்கை மாவட்டம், குன்றக்குடியில் செயல்பட்டுவரும் தருமை கயிலை குருமணி மேல்நிலைப்பள்ளியானது 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக்கல்வி பயிற்றுவிக்கும் பள்ளி என்பதாலும் அப்பள்ளிக்கு சமையலறை (Kitchen Shed) அமைக்கும் பணி அவசியம் என்பதாலும் நமக்கு நாமே திட்டம் 2009–10–ன் கீழ் சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதிக்கலாம் என்று அரசு முடிவு செய்து, சிவகங்கை மாவட்டம், குன்றக்குடியில் உள்ள தருமை கயிலை குருமணி மேல்நிலைப்பள்ளியில் சமையலறை (Kitchen Shed) அமைக்கும் பணியை நமக்கு நாமே திட்டம் 2009–10–ன் கீழ் ரூ.80,000/– (பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.40,000/– சேர்த்து) மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சிறப்பு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிவகங்கை.
––––––––––––––––––––––––––
மாண்புமிகு துணை முதலமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
––––––––––––––––––––––––––––––
செயலாளர்,
தருமை கயிலை குருமணி
மேல்நிலைப்பள்ளி,
குன்றக்குடி,
சிவகங்கை மாவட்டம்,
சிவகங்கை.